க.ஆ. 1121 ஓம் விளைநலம் – 100

தமிழ்நாட்டு செட்டிநாட்டு காரைக்குடி

தமிழ்த்தாய் திருக்கோயில் வரலாறு

35–ம் ஆண்டு

100–வது விளைநலம்

தொகுப்பு : **கம்பபாத சேகரன்,** கம்பன் அகம், நெல்லை–6.

தமிழ்ஞானசம்பந்தர் வெள்ளணி திருநாள் மலர்

தொகுப்பு : கம்பபாத சேகரன், திருவாவடுதுறை ஆதீன சமய பரப்புநர், நெல்லை.

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் **சிவப்பிரகாச தேசிக பண்டார சந்நிதி** அவர்களின் அருள் துணையுடன் வெளியிட்டோர்

கம்பன் இலக்கியப் பண்ணை

கம்பன் அகம், பிட்டாபுரம், நெல்லை–6.

1182–ம்ளு மேழம் 9 உ மூதிரை (22–4–2007)

ஸ்ரீ சண்முகவிலாஸ் லாலா ஸ்வீட்ஸ்

தொண்டர் சன்னதி, திருநெல்வேலி டவுண் – 6.

Ph : 2337948

ஸ்ரீ தேவி மெடிக்கல்ஸ்

240, புட்டாபுரத்தி அம்மன் கோவில் தெரு,

திருநெல்வேலி டவுண் – 6.

Ph : 2320123

ஸ்ரீ தேவி மெடிக்கல் சென்டர்

3, வடக்கு ரதவீதி, (லாலா கார்னர்), திலி டவுண் – 6.

சு. ஆறுமுகம் பிள்ளை அன் சன்ஸ்

ஆ. நாகேந்திரன், ஆ. செல்வம், மருந்தாளுனர்



ஆபிஸ் : 2334958 வீடு : 2339492

செல் : 93444–34958

ஸ்ரீ வெங்கடேஸ்வரா வேஸ்ட் பேப்பர் மார்ட்

244-A, பிட்டாபுரத்தம்மன் கோவில் தெரு,

திருநெல்வேலி டவுண்.

ஸ்ரீ சீனிவாசா வேஸ்ட் பேப்பர்ஸ்

142, சாலியர் தெரு, திருநெல்வேலி டவுண்.

உரிமை : மு. கோபி

உ

சிவமயம்



திருவாரும் துறசையமர் திகழ்குருவாய் பொலிந்தருளி
மருவுகின்ற மாந்தர்எலாம் மனங்களிக்க புரந்தருளி
குருமுதல்வர் குலமரபு குவலயத்து தழைத்திடசெய்
அருட்சிவப்பி ரகாசதேசி கர்மலர்தாள் போற்றினனே.

இவ்வரலாற்றினை எழுத திருவாணையிட்டருளிய
திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம்
சீர்வளர்சீர். **சிவப்பிரகாச பண்டார சந்நிதி** *அவர்கள்*
திருவடியை போற்றிப் பணிகிறேன்.

அடியவன் – கம்பபாதசேகரன்
கம்பன் அகம், நெல்லை–6.

ஒலித்தாய்

வரித்தாய்

அகத்தியர்

தொல்காப்பியர்

திருக்கோயில்

திருவள்ளுவர்

திருப்படிமங்கள்

இளங்கோவடிகள்

கம்பன்

அருளாசியுடன்
திருவாவடுதுறை ஆதீனம்

கற்பக தேசிக விநாயகர் துணை



படிமக்கலம்

"நின்னை வணங்கி நீவகுத்த நெறியில் நிற்கும் அதுஅல்லால்
என்னை அடியேம் செய்யற்பால? இன்பம் துன்பம் இல்லானே"
எனப் போற்றி.

திரு. **கம்பன் அடிப்பொடியார்** திருவடிகளுக்கு படிமக்கலம் செய்கிறேன்.

நன்றி பரவல்

இவ்வரலாற்றுச் செய்திகளை தந்து உதவிய கலைமாமணி. டாக்டர். திரு. **வை. கணபதி ஸ்தபதியார்,** தலத்திலிருந்து பணி செய்த திரு. **ஏரல். சண்முகம் ஸ்தபதியார்,** கம்பன் கழக **கம்பன் அடிசூடி, கம்பராமன், மஸ்ரீதர்** ஆகியோருக்கும், தமிழ்த்தாய் திருக்கோயில் நிறுவ துணை செய்த முதல்வர் டாக்டர். கலைஞர். திரு. **கருணாநிதி** அவர்கள், டாக்டர். திரு. M.G. **ராமச்சந்திரன்** அவர்கள், மத்திய நிதி அமைச்சர் திரு. **ப. சிதம்பரம்** அவர்கள் மற்றும் கம்பன் அறநிலையத்தார், கம்பன் கழகத்தார் அனைவருக்கும், மேலும் பணிகளை செய்வார்களுக்கும் அடியேனின் நன்றி. வணக்கம்.

அடியவன்

கம்பபாதசேகரன்

ஓம்

தமிழ்நாட்டு செட்டிநாட்டுக் காரைக்குடி

தமிழ்த்தாய் திருக்கோயில் வரலாறு

கம்பபாதசேகரன், திருவாவடுதுறை ஆதீன சமயப்பரப்புனர், கம்பன் அகம், நெல்லை–627006.

"வையம் ஈன்றதொல் மாக்கள் உள்ளத்தினைக்
கையி னால்உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்"

எனப் புலவர்களால் போற்றப்பட்டது நம் தமிழ்மொழி. தமிழை தெய்வமாக கொண்டு, திருக்கோயில் அமைத்து வழிபட்ட வரலாறே இந்நூல். எம் ஆசிரிய பெருமகனார் கம்பன் அடிப்பொடியார்

"செம்பவன வாயாய்! சிறந்து தமிழ்த் தாயுறையும்
தம்புனித ஊர்எதுவோ? சாற்றுவையே! – அம்புவிதான்
கண்ட கவிச்சக் கரவர்த்தி கம்பன்சீர்
கொண்டாடும் காரைக் குடி".

என தமிழ்த்தாய் தசாங்கத்தில் கூறுவார். காரைக்குடியில் கம்பன் மணிமண்டபத்தில்தான் தமிழ்த்தாய்க்கு திருக்கோயில் நிறுவப்பட்டு உள்ளது.

கம்பன் அடிப்பொடியார் கி.பி 1938ல் கம்பன் கழகத்தை தொடங்கினார். கம்பன் மணி மண்டபமும், கம்பன் அறநிலையையும் தோற்றுவித்தார்கள். அதன்பின் தமிழ்த்தாய்க்கு திருக்கோயில் நிறுவ எண்ணினார், 19–3–1970ல் முதல்வர். டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் கால்கோள்விழா நடந்தது. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களும் கலந்து கொண்டார்கள். இப்பணி இடையில் தடைபட்டது. கம்பன் அடிப்பொடியாரும் வான்நிலையுற்றார்கள். அதன்பின் அன்னாரின் அன்பு தொண்டர்களுடைய நல்முயற்சியால் 16–4–1993ல் தமிழ்த்தாய் திருக்கோயில் கடவுள் மங்கலம் செய்விக்கப்பட்டது.

ஓவியமும், திருக்கோயில் நிறுவும் முன்பே தமிழ்த்தாய்க்கு ஐம்பொன் படிமம் வடிக்கப்பட்டது. இனி திருக்கோயிலின் சிறப்புக்களை இனிப் பார்ப்போம்.

இடம் : இத்திருக்கோயில் அறவோர்களையும், அறிஞர்களையும், *வீரர்களையும் பெற்றுத் தந்த செட்டிநாட்டின் காரைக்குடி* நகரில் அமைந்துள்ளது. காரைக்குடி புதிய, பழைய பேருந்து நிலையங்களில் இருந்து பெரியார் சிலையின் அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் இறங்கி மேற்கே உள்ள சாலை வழியாக செல்ல வேண்டும். அந்த சாலையில் கம்பன் மணி மண்டபம் உள்ளது. அங்குதான் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

திருக்கோயில் அமைப்பு : இத்திருக்கோயில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட கம்பன் மணிமண்டபத்தின் தென்பக்கம் மூன்று ஏக்கரில் ஆறில் ஒருபங்கு நிலத்தில், மும்முனை அமைப்புள்ள நிலத்தில் உள்ளது.

முக்கோண மேடையில் ஆறுபட்டை, ஆறுநிலம், ஆறு உறுப்பு *விமானம் (சட்கோணம், சட்தளம், சடாங்க விமானம்)* கொண்டு கருவறை விளங்குகிறது.

கருவறை வாயில் வலப்புறம் ஒலித்தாயும், இடப்புறம் வரித்தாயும் வாயிற் காவலராக விளங்குகிறார்கள்.

கருவறை அறுகோண வடிவில், ஆறு தூண்களுடன் அமைந்துள்ளது. நடுவில் தமிழ்த்தாயின் கற்படிமம் மூலபேரமாக தாமரை தவிசில் *அமர்ந்த நிலையில்,* வடக்கு *முகமாக காட்சி* தருகிறாள். அருகில் வலப்புறம் அகத்தியரும், இடப்புறம் தொல்காப்பியரும் நின்ற கோலத்தில் வணங்கியபடி விளங்குகிறார்கள்.

கருவறை திருச்சுற்றின் வெளிப்புறம் உள்ள சுற்றுக்கோயில் வடகீழ் பக்கம் வள்ளுவர் வடக்கு முகமாக அமர்ந்த நிலையிலும், வடமேல்பக்கம் *கம்பனும் அமர்ந்த நிலையில்* வடக்கு முகமாக *உள்ளார்கள்.* தென்பக்கம் இளங்கோவடிகள் தென்முகமாக அமைந்துள்ளார்.

கருவறை மேல் 33 அடி உயரத்தில் ஆறுபட்டை, ஆறுநிலை, ஆறு உறுப்பு விமானம் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலுக்கு அருகில் அருட்பிள்ளையார் திருக்கோயில் உள்ளது. கிழக்குமுகமாக சிறிய வடிவு எழிலுடன் விளங்குகிறார். கருவறை மேல் கூடார விமானம் அமைந்துள்ளது.

திருக்கோயிலின் கீழ்த்திசை வேலிபக்கம் வேம்பும், மேல்திசை வேலிபக்கம் பனையும், வடதிசை வேலிபக்கம் ஆத்தியும், தெய்வ மரங்களாக நட்டு வளர்க்க வேண்டும் என்பது கம்பன் அடிப்பொடியாரின் குறிப்பாகும்.

திருவுருவச் சிறப்புகள்

எழுந்தருளும் திருமேனி : இது உற்சவபேரம் எனப்படும் உற்சவமூர்த்தியாகும். திருக்கோயில் நிறுவும் முன்பே இப்படிமம் வார்க்கப்பட்டதாகும். கி.பி.1942–ல் கம்பன் அடிப்பொடியார் உளத்திரையில் தீட்டிய தமிழ்த்தாயின் வடிவம் திரு. எஸ்.கே. அய்யா அவர்களால் ஓவியமாக தீட்டப்பட்டது. பின்னர் கி.பி. 1957ல் 16 பவுன் பொன் கலந்து ஐம்பொன் படிமமாக வடிக்கப்பட்டது. இது சிற்பகலா சாகரம் திரு. ம. வைத்திநாத ஸ்தபதியார் அவர்களால் மாமல்லபுரத்தில் வைத்து வார்க்கப்பட்டது. அற்புத வடிவம் இத்திருவுரு.

"பூவுலகத் தவிசென்று பொலிந்து தோன்றும்
பொறிமலர் மேல் பாவு பதப்பொற்பு தோன்றும்"

என்றபடி உலக உருண்டை மீது அமர்ந்து, இடதுகாலை மடக்கி, வலதுகாலை கீழ்உள்ள தாமரையில் பதித்து தொங்கவிட்டு காட்சி தருகிறாள். நான்கு திருக்கரங்கள் அதில்

வலக்கரத்தில் மணிமாலை வலமேலில் சுடர்விளக்கும்
துலங்கும்இட மேலில்யாழ் தொல்ஒடே இடக்கரத்தில்
நிலைத்திருக்க உலகமிசை நிலவுமொரு தமிழ்த்தாயின்
மலர்க்குவமைத் திருவடியே வணங்கிமுடி சூடுவமே.

என்றபடி வலக்கரத்தில் மணிமாலை, வலது மேல்கரத்தில் சுடர், இடது மேற்கரத்தில் யாழும், இடது கரத்தில் ஏடும் தாங்கி, திருமுகத்தில் குஞ்சிரிப்பும், அணிபணிகள் பலபூண்டு, திருமுடியில் மகுடம் ஒளிர, அருட்கோலக் காட்சி தருகிறார்.

மறுவேதும் இல்லாத மையப் போதில்
மணிச்சிலையாம் தமிழ்த்தாயின் வடிவம் தோன்றும்
செறியுமதன் முன்புறத்தே செம்பொன் மேனித்
திருவுருவாய் மிளிர்தமிழ்த்தாய் சிறந்து தோற்றும்

என்றபடி சிறப்பு நாட்களில் கருவறை கற்படிமத்தின் முன்பு ஐம்பொன்

திருபடிமமாம் தமிழ்த்தாய் எழுந்தருளிவித்து வழிபாடுகள் இயற்றப்படு கின்றது. இத்திருவுருவை வார்த்தவர் பெருஞ்சிற்பியார் திரு. ம. வைத்தியநாத ஸ்தபதியார் ஆவார். அவர் இந்த படிமத்தைப் பற்றி,

"நடராஜ மூர்த்திக்குப் பிறகு இம்மூர்த்தியே பல்லாற்றானும் கலை, தத்துவம், விஞ்ஞானம் ஆகிய மூன்றின் கருத்துச் செறிவுமுள்ளது. எங்களைப் போன்ற ஸ்தபதிகட்கு இந்த இரண்டு மூர்த்திகளுந்தான் அற்புதப் பொருளாக உள்ளன". என்றார். கம்பன் அடிப்பொடியாரும் இப்படிமம் பற்றி "தமிழ் அன்பர்களும் படிமக் கலைஞர்களும் வெளிநாட்டிறிஞர் களும், மெய்யாகப் பாராட்டியது, நிகழ்காலத்தில் தோன்றிய தமிழ்த்தாயின் திருப்படிமம். இப்படித்தைக் கண்டு அறிஞர் அண்ணா அவர்கள் மனமுருகப் பாராட்டினரார்கள். இதன் அச்சுப் படத்தைப் பெற்றுக் கொண்டபோது அதைக் கண்ணில் ஒற்றிக் கசிந்துள்ளம் நெகிழ்ந்தார்கள்" என்று கால்கோள் விழாவில் உரையாற்றினார்கள்.

கருவறை திருமூர்த்தம் : கருவறை ஆறு தூண்களுடன் அறுகோண வடிவில் அமைந்துள்ளது. நடுவில் சுமார் 7 அடி உயரத்தில் தமிழ்த்தாயின் கற்படிமம் அமைந்துள்ளது. கலை உணர்வும், அருள் உணர்வும் கொண்டு இத்திருமேனி விளங்குகிறது.

இத்திருவுருவின் திருவாசியில் 21 சுடர்கள் உள்ளது. திருவாசியின் மேற்புறம் இருமீன் வடிவமும் சற்று கீழ் பக்கம் வலது, இடது பக்கங்களில் வில்லும், புலியும் அமைந்துள்ளது. இது மூவேந்தரின் இலச்சினையைக் குறிக்கும். தன்னை போற்றும் அன்பர்தம் உளத்தாமரையில் அமர்வது போல் தாமரை இருக்கையில் அமர்ந்து, இடது திருவடியை மடக்கி இருக்கையில் வைத்தும், வலது திருவடியை இருக்கையில் தொங்க விட்டும், தொங்க விட்ட திருவடி கீழே உள்ள தாமரையில் பதித்தும், வடக்கு முகமாக அருட்பார்வை புரிகிறாள்.

தமிழ்த்தாயின் திருவடியில் சிலம்பும், பரிபுரமும், தாள் விரல்களில் மெட்டியும், இடையில் மேகலை, இடைசெறி, துகில் விளங்க, வலது கரத்தில் மணிமாலை, வலது மேற்கரத்தில் சுடரும், இடக்கரத்தில் ஏடும், இடது மேற்கரத்தில் யாழும் விளங்க, அக்கரங்களில் வளை, கைச்சரி, தொடியும், கை விரல்களில் மோதிரம், நெளிவும், திருப்புயத்தில்

பரியங்கமும், வங்கியும், திருத்தோளில் அங்கதம், தோள் வளையும் திருச்செவியில் தோடு, கொப்பு, திருக்கழுத்தில் மணிவடம், முத்துமாலை, சரப்பளி, கொத்து முதலிய விளங்க திருமுடியில் கரண்ட மகுடம் புனைந்து, நெற்றியில் திலகமும் ஒளிர, எழில் நாசியும், கருணை விழியும், விற்புருவமும், உந்திச் சுழியும், விம்மிய கொங்கைகளும், அதனை இறுக்கிக் கட்டிய கச்சையும், நாடிக்குழியும், திருமேனி உறுப்புகளின் நெளிவு, நரம்பு, நகம், இரேகை முதலிய உயிர்த்துடிப்புடன் அமைய மெருகுடன் நுட்பமாய் வடிக்கப்பட்டுள்ளது.

இந்த படிமத்தை வடித்த சிற்பியார் கலைமாமணி டாக்டர். வை. கணபதி ஸ்தபதியார் ஆவார். அவர்கள் 18–10–2004ல் அடியேற்கு எழுதிய கடிதத்தில் "இந்த தமிழ்த்தாய் உருவத்தின் சிறப்புகளை கவிதையாக மனதில் அனுபவித்து கல்லோவியமாக செய்தேன். ஒரு கவிஞன் தமிழ்த்தாய் பற்றி சொல்லால் என்ன சொல்லுவானோ அத்தகைய குணச்சிறப்புகளை உருவளித்திருப்பது இச்சிலையாகும். சொல்லும், கல்லும் ஒன்றித்தும் போகும் படிமம் இஃதாகும். அதுபோலவே கவிஞனாகவும், கலைஞனாகவும் இருந்து இந்த உருவத்தை தோற்றிவித்தேன்" என்றார். உண்மை நேரில் கண்டால்தான் அதன் சிறப்பை உணர்ந்திட முடியும்.

இப்போது உள்ள கருவறை திருப்படிமம் இரண்டாவதாக வடிக்கப்பட்டதாகும். முதலில் வடிக்கப்பட்ட படிமம் அன்றைய முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் உதவியுடன் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் பொறுப்பில் தமிழக அரசு சார்பில் 5–வது உலகத்தமிழ் மாநாட்டின் போது தேரில் ஏற்றி மதுரை தமுக்கம் மைதானத்தில் பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அம்மையாரால் திறந்து வைக்கப்பட்டது. இப்படிமத்தை கம்பன் அடிப்பொடியார் அவர்கள் அன்பளிப்பாக அளித்தார்கள்.

அகத்தியர், தொல்காப்பியர் : கருவறையின் தமிழ்த்தாய் படிமத்தின் அருகில் வலப்புறம் அகத்தியரும், இடப்புறம் தொல்காப்பியரும் நின்ற நிலையில் கூப்பிய கரங்களுடன் விளங்குகிறார்கள்.

ஒலித்தாய் : கருவறை வாயிலின் வலதுபுறம் ஒலித்தாய் நான்குகரங்களுடன் காட்சி தருகிறார். வலது மேற்கரத்தில் சங்கும்

கீழ்க்கரத்தில் சின்முத்திரை, இடது மேற்கரத்தில் சுடரும், கீழ்க்கரத்தினை மேல் நோக்கிய படியும் விளங்குகிறார். திருவடி குஞ்சிதமாகவும் உளது.

வரித்தாய் : கருவறை வாயிலின் இடதுபுறம் வரித்தாய் நான்கு கரங்களுடன் காட்சி தருகிறாள். வலது மேற்கரம் தர்ஷினி ஹஸ்தம், வலது கீழ்கரத்தில் எழுத்தாணி பிடித்தும், இடது மேற்கரத்தில் சுடரும், கீழ்க்கரத்தில் ஏடும் விளங்க (ஏடு எழுதும் பாவனை) காட்சி தருகிறாள். வலது திருவடி ஸ்திரகுஞ்சிதம் உளது. ஒலித்தாயும், வரித்தாயும் அணிகலன்கள் பல பூண்டு எடுப்பான பார்வையுடன் எழில் திகழ விளங்குகிறார்கள்.

திருவள்ளுவர் : கருவறை வெளிப்புற சுற்றுக் கோயிலின் வடகீழ் பக்கம் அமர்ந்த நிலையில் சம்மணமிட்டு வலக்கையின் சுண்டு விரலையும், கட்டை விரலையும் சேர்த்து நடுவிரல் மூன்றையும் நீட்டியபடி இடக்கையில் ஏடுதாங்கி, தாடி, மீசையுடன் அறப்பார்வையுடன் வடக்குமுகமாக திருவள்ளுவர் காட்டிதருகிறார்.

இளங்கோவடிகள் : கருவறை வெளிப்புற தென்பக்க சுற்றுக் கோயிலில் அமர்ந்த நிலையில் இடக்காலை மடக்கி, வலக்காலை குந்திட்டு, குந்திய காலின் முட்டில் வலக்கை முட்டினை வைத்து, அக்கையில் ஏடு தாங்கியும் இடக்கையை வளைத்து முதுகுப்பக்கம் பீடத்தில் ஊன்றியும், மொட்டைத் தலையும் வடிகாதும் முகத்தில் அன்பு தவழ தெற்கு முகமாக இளங்கோவடிகள் காட்சி தருகிறார்.

கம்பன் : கருவறை வெளிப்புற வடமேற்கு பக்க சுற்றுக் கோயிலில் வள்ளுவரைப் போல சம்மணமிட்டு, வலக்கையில் அபயக்குறிப்புக்காட்டி, இடக்கையில் ஏடுதாங்கி எடுப்பான பார்வையுடன் அடர்ந்த மீசையுடன் வடக்கு முகமாக கம்பன் காட்சி தருகிறார்.

திருக்கோயில் வழிபாட்டு மரபு

திருக்கோயில் நிறுவும் முன்பே, வழிபாட்டு நெறிகளை எம் ஆசிரியபிரான் கம்பன் அடிப்பொடியார் மிக நுட்பமாக வகுத்து உள்ளார்கள். அதனை எழுதியும் வைத்துள்ளார்கள். "பல்இயல் நெறியில் பார்க்கும் பரம்பொருள்" எனக் கம்பன் கூறுமாப்போல அவனடி பரவிய

கம்பன் அடிப்பொடியார் அனைத்து சமயத்தவரும், வழிபடும் நெறியாக வகுத்துள்ளார். இறைவன் உண்டு என்பாரும், இல்லை என்பாரும் ஒருங்கே வந்து வழிபடும் நெறியாக வகுத்துள்ளார். சாதி, மதம் கடந்த வழிபாட்டு நெறி பழந்தமிழர் மரபு ஆகும்.

1) ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதி திருவுருவங்களுக்கு எண்ணெய் சாத்தித் திருநீராட்டு செய்யப் பெறும்.

2) திருநீராட்டிற்கு அதற்கென அன்று ஆக்கிய தொன்னையைக் கொண்டே நீராட்ட வேண்டும். உலோகம், மரம், மட்கலம் பயன்படுத்தக் கூடாது. (பெருஞ்சாந்தி காலங்களில் இவ்விதி தளர்த்தலாம்)

3) திருவுருவங்களுக்கு ஆடை, அணிகலன்கள், மாலை, மலர் முதலியன அணிவித்தல் கூடாது. ஆனால் மூர்த்திகளை எவ்வகையாலும் ஒட்டாமல் மேலும் கீழும், பின்புறம், இரு பக்கங்களில் அணி செய்யலாம்.

4) நறுமணப் புகைக்கால், ஒளிவிளக்குகால், சூடத்தட்டு முதலியவற்றால் வழிபாடு செய்யும்போது திருவுருவங்களுக்கு எட்டி நின்றே பணி புரிதல் வேண்டும்.

5) மலர், மாலை, நறும்புகை முதலிய பொருட்களை திருமுற்றத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள தாம்பாளத்தில் படைக்க வேண்டும்.

6) வாழை, மா, பலா, இளநீர், தேங்காய், தேன், பால், சர்க்கரை முதலியன படைக்கலம் இதனை

"ஆன்பாலும் மலைத்தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேன்போலும் நறும்பாகும் சிறந்தபல மூதிரைகளும்
போனகமாய் யாம்படைத்துப் போற்றுகின்றோம் நின்னடிகள்"
என்பார் கம்பன் அடிப்பொடியார்

7) சந்தனம், பால், சர்க்கரை, மலர் ஆகியவற்றை அருட்பொருளாக (பிரசாதம்) வழங்கலாம்.

8) வழிபடவருவோர் தங்கள் சமயச் சின்னங்கள், குறிகளுடன் வரலாம். அவரவர் சொந்த பயனுக்கு திருநீறு, குங்குமம், திருமண், கோபி

முதலியன கிடைக்கும்படி செய்யலாம். ஆனால் அவை தமிழ்த்தாயின் திருக்கோயில் பொருட்கள் அல்ல.

9) திருக்கோயில் பொதுவழிபாடு நிறைவேறியதும், வந்துள்ளவர்களில் மூத்தவர் ஒருவருக்கு சாதி, மத வேறுபாடின்றி சந்தனம் மலர், சர்க்கரை வழங்கி தேங்காய், பழம் முதலிய உள்ள தாம்பாளத்தை வழங்கி மரியாதை செய்ய வேண்டும்.

10) திருவுருவங்களுக்கு வருடத்தில் 12 நீராட்டிற்கு மேல் போகாது வரையறை அமைத்துக் கொள்ள வேண்டும். எண்ணெய், பால், தயிர், இளநீர், பழச்சாறு, நறுமண நீர், கங்கை மந்திர கலசநீர், பன்னீர் போன்றவைகளை திருநீராட்டிற்கு பயன்படுத்தலாம்.

11) மந்திரகலசநீர் ஆக்குவதற்கு 3, 6, 12 பேர்கள் தமிழில் பாசுரங்களைப் பாடி பாராயணம் செய்ய வேண்டும். 16, 24, 32, 64, 96, 108 முறை மாறி மாறி பாசுரங்களை ஓத வேண்டும். அத்துடன் போற்றி வணக்கம் ஓதி மலரும், பச்சிலையும் தூவ வேண்டும். கலசநீரை மேள வாத்தியம் தீவட்டி மரியாதையுடன் எடுத்துச் சென்று நீராட்ட வேண்டும்.

12) தமிழ்த்தாய், வள்ளுவர், இளங்கோ, கம்பன் ஆகியோர்க்கு மலர் வணக்கம் உள்ளது.

13) திருக்கோயிலில் நாளும் காலையில் ஓதுவார் மூர்த்திகளைக் கொண்டு பண்ணொடு தமிழ்த்தாய் பிரபந்தங்கள் ஓதப்படுகிறது. இந்த பிரபந்தங்களை தமிழ்த்தாய் திருக்கோயில் கால்கோள் விழா முடிந்தவுடன் கம்பன் அடிப்பொடியார் அவர்களே தொகுத்தார்கள்.

தமிழ்த்தாய்த் திருக்கோயில் நுட்பக்கூறு

முக்கோண மேடை :

"முக்கோண நன்னிலத்தில்" தமிழகத்தின் நில அமைப்பு.

மும்மதில் :

"மதிலவை முத்தமிழாய்த் தோன்றும்" இயல், இசை, கூத்து என்னும் முத்தமிழ் மதில்.

மூன்று திருச்சுற்று :

"எண் எழுத்து இலக்கமதாய் இலங்கு மூன்று...... பிரகாரம்" எண், எழுத்து, இலக்கம் திருச்சுற்று.

ஆறுதளம் :

ஆசிரியம், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபாடல் எனும் யாப்புவகை.

ஆறுஉறுப்பு :

அறுவகை இலக்கணம் அல்லது யோகஆதாரம் ஆறினைக் கூறு.

ஆறு கோண விமானமும், கலசமும் :

நிறுத்தல், முகத்தல், பெய்தல், நீட்டல், தெறித்தல், சார்த்தல் இவை ஆறுக்கும் தேவையான எண்ணல் என்பவை.

"எழுவகை அளவைகளால் ஞாலம் முற்றும் கணித்தவனை"

ஆறுதூண் :

"அறுதூணில் அறுசமயம் அமைந்து தோன்றும்" ஆறு சமயங்களை குறிக்கும்.

தாமரை இருக்கை :

தமிழைப்போற்றுவார் உள்ளத்தாமரையில் அமர்ந்து அருளுவது.

திருவாசி :

"வில் புலி கயற்குறி மேவினை" மூவேந்தரின், வில், புலி, மீன்குறிகளுடன் 21 சுடர்கள் உள்ளது.

அணிகலன்கள் :

சிலம்பு, மேகலை, வளை, மணிமாலை, கருங்குழல் ஐம்பெருங்காப்பியங்களைக் குறிப்பனவாம்.

திருக்கைகள் : "ஒருகையிற் புத்தகந்தான் அறம் பாராட்ட,
ஒருகையிற் படிகமணி பொருள் நாட்ட,
தருகையுறும் ஒருகையாழ் இன்பம் மீட்ட,
தனிக்கையில் ஏந்துசுடர் வீட்டை காட்ட"

ஏடு – அறம், மணிமாலை – பொருள், யாழ் – இன்பம், சுடர் – வீடு எனும் நாற்பொருள் காட்டும்.

ஒலித்தாய் : அருவம் – நாதம், எழுத்தின் ஒலி வடிவு

வரித்தாய் : உருவம் – விந்து, எழுத்தில் வரிவடிவு

"வரும் ஒலியே அருவமாக மற்றும் காணும்
வரிவடிவே உருவமாக வயங்குகின்ற"

ஐம்பூதம் : மேவுயிரும் மெய்யும் உயிர் மெய்யும் எண்ணும்
மிளிருகின்ற இலக்கமுமாய் விரிந்த பூதம்
பாவுமெனதான் விளங்கும் எம்பிராட்டி"
உயிர், மெய், உயிர்மெய், எண், இலக்கம் ஐம்பூதமாம்.

மலர் :

கற்பு முல்லை சூடுதல், மூவேந்தரின் தாரினை அணிதல் "நாறுநறு முல்லையம்மா", "ஆத்தி வேம்பு பனை சூடி அருள்புரியும் தமிழ்த்தாயை"

இலை : "அறுகம்புல் மாலையாக ஒக்கப் பசுந்தமிழ்
அன்னை கொண்டாள்"

அறுகம்புல் இது எளிமை, பசுமை, தூய்மை, அழிவின்மை, மாசுநீங்குதல் முதலிய தன்மைகள் உள்ளது.

தலமரம்: மூவேந்தரின் கடவுள் மரம் வேம்பு, ஆத்தி, பனை

கொடி : நீலத்துணியில் அன்னப் பறவை
"மாதர் மயில்நீல வண்ணத் துகில்நின்ற
கோகிலா அன்னக்கொடி"

படையல் :

வாழை, மா, பலா, தேன், இளநீர், பயறு வகைகள், சர்க்கரை "முப்பழம் பால்நறும் தேன் இளநீரும் மூதிரைகள் சர்க்கரை முதலிய யாவும், திப்பிய முறையில் நின்முன் படைத்தோம்".

திருக்கடைக்காப்பு : ஒவ்வொரு சமயத்திற்கும் எப்படியொரு புனித தலம் உண்டோ, அதுபோல தமிழ் பேசுவோருக்கு புனிதத் தலம் இத்தமிழ்த்தாயின் திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலில் திருச்சுற்று, முன்மண்டபம், தோரண வாயில் முதலிய பல பணிகள் நிறைவேற வேண்டும். அருள் உள்ளம் கொண்ட அன்பர்கள் இப்பணிக்கு உதவிடவும். தமிழ்த்தாய் திருக்கோயில் புகழினை பாரெங்கும் பரவிடச் செய்யவும் வேண்டுகிறேன். குறைமதியேன் எழுதிய இந்நூலில் குறைகள் நீக்கி நிறைகொள்ள வேண்டுகிறேன்.

எம் பணிக்கு இசைந்தோர் சிவத்திரு. A.S. முத்தையா,(Tel.) பிட்டாபுரம், நெல்லை–6.
திரு. R. ஸ்ரீதர், பாட்டப்பத்து, நெல்லை–6.

வரலாற்றுக் குறிப்பு

கி.பி. 1938–ல் காரைக்குடி கம்பன் கழகம் தோன்றுதல்.

கி.பி. 1942–ல் தமிழ்த்தாய் ஓவியம் தீட்டப்பட்டது.

கி.பி. 1957–ல் தமிழ்த்தாய் ஐம்பொன் படிமம் வார்க்கப்பட்டது.

19–3–1970–ல் கம்பன் மணிமண்டபம் கால்கோள்விழா

23–4–1975–ல் தமிழ்த்தாய் திருக்கோயில் கால்கோள்விழா

தவத்திரு. **குன்றக்குடி அடிகளார்** அவர்கள்

திரு. டாக்டர். கலைஞர். **மு. கருணாநிதி** அவர்கள்

23–5–1988–ல் திருவை. கணபதி ஸ்தபதியார் மதிப்பீடு செய்தல்

16–4–1993–ல் தமிழ்த்தாய் திருக்கோயில் கடிவுள் மங்கலம்

திரு. டாக்டர். கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்

2–10–2004–ல் திருக்கோயில் குறிப்பு எடுத்தல்.

தொடர்பு கொள்ள முகவரி
கம்பன் அறநிலை, கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி – 630 001. போன் : 04565 – 237600
நன்றி : காரைக்குடி கம்பன் அறநிலையம்

உயர்ரக இனிப்பு, காரம் & பேக்கரி
வகைகளுக்குச் சிறந்த இடம்

ஸ்ரீசுகி A/c

❖ சுவீட்ஸ் ❖ பேக்கரீஸ்
❖ ஐஸ்கிரீம் ❖ கூல்டிரிங்ஸ்

98, வடக்கு ரதவீதி, திருநெல்வேலி டவுண்.
27, 28, மதுரை ரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.



S.சங்கரன்பிள்ளை

பக்தர்கள் பேரவை அமைப்பாளர்
அருள்மிகு பால்வண்ணநாதர்
அருள்தரும் ஒப்பினாம்பிகை திருக்கோவில்
பேட்டை. Ph : 2341051

38, வேம்பயடி அம்மன் கோவில் தெரு,
பேட்டை, திருநெல்வேலி-4.

Ph : 2320019

அருண் பிரிண்டர்ஸ்

DTP-OFFSET-SCREEN

182-W, S.N. ஹைரோடு, சென்ட்ரல் தியேட்டர் எதிரில்,
திருநெல்வேலி - 627 001.

Ph : 2331631 Cell : 94433-24317

vivekananda Graphics

DTP WORKS

52-B (Ups.) North Car Street,
Near Shyamala Book Shop, Tirunelveli Town.
E-mail : vivekanandajkp@yahoo.co.in

அழகிய 22 Ct, 916 KDM
தங்க நகைகள் வாங்க சிறந்த இடம்

கோமதீஸ்வரன்
ஜூவல்லர்ஸ்

244, மேலரத வீதி, திருநெல்வேலி டவுண்.
Ph : 2320642 Cell : 94433-59673

எங்களது தங்கநகை சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடைவீர்!

நெல்லையில் இலவசமாக கண் பரிசோதனை
செய்வதற்கு சிறந்த ஸ்தாபனம்

ஸ்ரீ சாலைக்குமார்

ஆப்டிகல்ஸ்

123, மதுரை ரோடு, (சென்ட்ரல் பஸ் ஸ்டாண்ட் தென்புறம்),
திருநெல்வேலி ஜங்ஷன். Ph : 2333650

எல்லோரும் இன்புற்றிருப்பது அல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே!

ஹெல்த்கேர்

Cell : 98431-57363 எடிட்டர் : R.C. ராஜா

10, வையாபுரி நகர், திருநெல்வேலி டவுண் - 6.

卐 உ ஸ்ரீ



"கோமதி அரசு"

ச.சோமசுந்தரம் செட்டியார் சன் ஜுவல்லர்ஸ் A/c

உரிமை : கயிலை. சோம. திருநாவுக்கரசு செட்டியார் M.A.

கயிலைமணி. கோமதி திருநாவுக்கரசு

(பெரிய கடை) கூலக்கடை பஜார் எதிரில், 77/39, மேலரத வீதி,

திருநெல்வேலி டவுண். ✆ கடை : 2333120, 2339937 வீடு : 2331074

ராகவி

லேடீஸ் டெய்லர்ஸ்

•சுடிதார் •மிடி

•பிளவுஸ் •யூனிபார்ம்

கோ-ஆப்டெக்ஸ் மாடியில்,

59, மணி காம்ப்ளக்ஸ், வடக்கு ரதவீதி,

திருநெல்வேலி டவுண்.

CELL : 9360504493

தமிழ்த்தாய்
திருக்கோயில்

Off : 2500487, 2322350, 2336295 Resi : 2500065

அனைத்து மருந்துகளும் கிடைக்குமிடம்

முத்துமாரி

மெடிக்கல் ஸ்டோர்ஸ்

(Dr. H. சிவராமகிருஷ்ணன் அவர்கள்
கிளினிக் எதிரில்),

1-E, சாலைத்தெரு, வண்ணார்பேட்டை,

திருநெல்வேலி - 627 003.

Vivekananda Graphics, Tvl-6. Hello : 2331631, 9443324317